1998 மே 18]

திரு. ஐ. கணேசன்: சரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஐ. கணேசன் ஆகியோர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை ஒன்று பனமரத்துப்பட்டியில் உடைக்கப்பட்டது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பை இங்கே தந்திருக்கின்றார்கள். அவர்கள் இதிலே என்ன பேசினார்கள் என்பதைப் பார்க்கும்போது - முதலிலே தெரிந்து கொள்ள வேண்டும். இந்தச் சிலை சிமெண்டினால் செய்யப்பட்ட ஒரு சிலை. வெண்கலத்தினால் செய்யப்பட்ட சிலையையே உடைக்கக்கூடிய ஆற்றலாளர்கள், சென்னையில், அந்தக் காலத்திலே (சிரிப்பு) அண்ணா சாலையிலே இருந்ததை உடைத்த ஆற்றலாளர்கள் தமிழ்நாட்டில் இருப்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் நன்கு தெரியும். அவர்கள் இதிலே என்ன பேசினார்கள் என்பதைப் பார்க்கும்போது - இந்தச் சிலையை உடைத்ததற்காக வருத்தப்படுகிறார்களா அல்லது உடைத்ததாகக் கைது செய்யப்பட்டிருக்கின்ற இரண்டு பேருக்காக உறுப்பினர்கள் வருத்தப்படுகின்றார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

இரண்டு பேர், தங்கவேல் என்ற ஒருவரும் சீனி என்ற சீனிவாசனும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். 2-5-1998 அன்று அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் எந்தக் கட்சியையும் சார்ந்தவர்கள் அல்லர் என்றும், ரௌடிகள், போக்கிரிகள் என்றும் அந்த வட்டாரத்திற்கே நன்றாகத் தெரியும். அவர்கள் குடிபோதையில் இந்தக் காரியத்தைச் செய்தார்கள் என்றும் காவல் துறை மூலமாகத் தகவல் அனுப்பப்பட்டிருக்கின்றது. இந்த இரண்டு பேரன்னியில் வேறு யாராவது இதிலே ஈடுபட்டிருந்தால் அவர்களையும் விசாரிக்கச் சொல்லி அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு ஆணையிடப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொதுவாக திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஒவ்வொரு சிலைக்கும் காவல் போட்டுக் கொண்டிருக்க முடியாது. ஏனென்றால், தமிழ்நாட்டில் சிலை வைப்பது என்பதற்கு இலக்கணம் என்ற ஒன்று இல்லை. சிலைகள் அமைப்பதென்றால், அதற்கு அரசிடம் அனுமதி பெறவேண்டும். அதுவும் அந்த வட்டாரத்தில் உள்ள நிர்வாக அலுவலகங்களிடத்திலே, அதிகாரிகளிடத்திலே அனுமதி பெறவேண்டும்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 18

மாநகராட்சி அல்லது நகராட்சி அல்லது ஒன்றியம் அல்லது ஊராட்சி போன்ற இந்த அமைப்புகளிடத்திலே அனுமதி பெற வேண்டுமென்று இல்லாமல், உணர்ச்சிபூர்வமாக எந்த நிலைமையையும் சமாளிக்கலாம் என்ற எண்ணத்தோடு அவரவர்கள் ஆங்காங்கே சிலைகளை வைக்கின்றார்கள். இந்தச் சிலை வைப்பதிலே அந்தத் தலைவர்கள் மீது உண்மையான பற்றும் சிலை வைப்பவர்களுக்கு இருக்கிறது. சில நேரங்களில் சிலை வைப்பது என்ற பெயரால் சிறந்த வசூலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் மனதிலே வைத்து இந்தச் சிலைகள் அமைப்பதுபற்றி நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இருந்தாலும்கூட இவற்றையெல்லாம் காப்பாற்றவேண்டியவர்கள், சிலை வைப்பவர்கள்தான் அல்லது அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள்தான் அதற்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகின்ற இதுபோன்ற ஒன்றிரண்டு சம்பவங்களில், அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அமைதியை ஏற்படுத்த தன்னால் இயன்ற எல்லா வகையான முயற்சிகளிலும் ஈடுபடுகின்றது. அந்த வட்டாரத்திலே உள்ள கட்சிகளின் தலைவர்கள், பெரியவர்கள் இவர்களெல்லாம் கூடிக் கலந்தாலோசித்து அங்கே அமைதியை உருவாக்க அரசு முனைப்போடு செயல்பட்டு வருகின்றது.

பொம்மைகள் சிலைகள் என்றும், சிமெண்டினால் செய்யப்பட்டவை சிலைகள் என்றும் வைக்கப்படுகின்ற காரணத்தால்தான் மிகச் சுலபமாக சமூக விரோதிகள் இப்படிப்பட்ட சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு விடுகின்றார்கள். நம்முடைய திரு. கணேசன் அவர்கள் பேசும்போது, எம்.ஜி.ஆரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்பதைப் போல, ‘அவர் எவ்வளவு வள்ளலாக வாழ்ந்தார்; எப்படியெல்லாம் இருந்தார்’ என்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். ஆனால், எம்.ஜி.ஆரைப் பற்றி, அன்றைய பிரதமர் ஒருவருக்கு, இன்றைய இந்தக் கட்சியினுடைய தலைவர் என்ன எழுதினார் என்பதையெல்லாம் தயவுசெய்து நம்முடைய திரு. கணேசன் அவர்கள் படித்துப் பார்த்தால் நன்றாக இருக்கும். ஆங்கிலத்திலே கைப்பட எழுதப்பட்ட கடிதம் அது. தன்னைப் பார்த்து எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார் என்று சொன்னவர்தான் இந்தக் கட்சியினுடைய தலைவராக இருக்கிறார் என்பதையும் திரு. கணேசன் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நல்லது என்று குறிப்பிட்டு, இந்த அளவில் எனது விளக்கம் போதும் என்று கருதி, அமைகிறேன்.